ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2405/32 - 2024 ඔක්තෝබර් මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.10.10

*2405/32 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154ஊ ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 154இ ஆம் உறுப்புரையின் கீழ் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 19(5) ஆம் உப பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விதிகள்**

மேல் மாகாணத்தின் ஆளுநர் ஹனிப் யூசுப் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154ஊ ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய, 154இ ஆம் உறுப்புரையின் கீழ் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 19(5) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட "2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மேல் மாகாண சபை நிதியத்திற்கு உரிய பெறுகை நடவடிக்கை தொடர்பான (திருத்திய) விதிகளை" இங்கு வெளியிடுவதாக அறிவிக்கின்றேன்.

**ஹனிப் யூசுப்,**
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபை கட்டடத்தில் அமைந்துள்ள,
மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில்,
பத்தரமுல்லை,
*2024, ஒற்றோபர் 09.*

1A - PG 6901 — 07 (2024/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விதிகள்**

1. இந்த விதிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2024, யூலை 26 ஆந் திகதிய 2394/ 70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டிருந்த 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண சபை நிதியத்துக்குரிய பெறுகை நடவடிக்கை தொடர்பான (திருத்திய) விதியினால் திருத்தப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2024, யூலை 30 ஆந் திகதிய 2186/ 25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டிருந்த மேல் மாகாண சபை நிதியத்துக்குரிய பெறுகை நடவடிக்கை தொடர்பான விதிகளைத் திருத்துவதற்கு அமுல்படுத்தப்படுகின்றது.

2. இந்த விதிகள் மேல் மாகாண சபை நிதியத்திற்குரிய பெறுகை நடவடிக்கை தொடர்பான (திருத்திய) விதிகள் என்று அழைக்கப்படும்.

3. இந்த விதிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2020, யூலை 26 ஆந் திகதிய 2394/ 70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டிருந்த 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண சபை நிதியத்துக்குரிய பெறுகை நடவடிக்கை தொடர்பான (திருத்திய) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2024, யூலை 30 ஆந் திகதிய 2186/ 25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்த மேல் மாகாண சபை நிதியத்துக்குரிய பெறுகை நடவடிக்கை தொடர்பான விதியின் 7 ஆவது பிரிவின் முதலாவது உப பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் "பத்து மில்லியன்" என்ற சொற்களை அகற்றி "பதினைந்து மில்லியன்" என்ற சொற்களை உள்ளடக்கி இங்கு திருத்தப்படுகின்றது.

4. இந்த விதிகளின் கீழ் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிச் சொற்களுக்கிடையே ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழியிலான சொல்லே முன்னுரிமை பெறும்.

EOG 10-0116

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.